தினமலர்
www.dinamalar.com
www.facebook.com/Dinamalardaily
விழுப்புரம்
நமது மாவட்ட செய்திகளை தரும் நம்பர் 1 நாளிதழ்
புதுச்சேரி ● புதன் ● ஜூன் 26, 2019

திண்டிவனம் – மயிலம் சாலையில் மூன்று ஹைமாஸ் விளக்குகள்

■ திண்டிவனம் – மயிலம் சாலை டவுன் போலீஸ் நிலையம் அருகே நகராட்சி சார்பில் ஹைமாஸ் விளக்கு அமைக்கும் பணி நடந்தது.

திண்டிவனம், ஜூன் 26–

திண்டிவனம் – மயிலம் ரோட்டில், நகராட்சி சார்பில், 25 லட்சம் ரூபாய் செலவில் ஹைமாஸ் விளக்குகள் பொறுத்தும் பணி நடந்தது.

திண்டிவனம் மேம்பாலத்திலிருந்து மயிலம் செல்லும் சாலையில் உள்ள ஜக்காம்பேட்டை வரையிலான சாலை குறுகலாக இருந்ததால், அடிக்கடி விபத்து ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, திண்டிவனம் – ஜக்காம் பேட்டை வரையிலான சாலையை அகலப்படுத்தி, சாலையின் நடுவே டிவைடர் போடப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த இந்த சாலை, இரவு நேரத்தில் இருள் சூழ்ந்து காணப்பட்டதால், அடிக்கடி விபத்து ஏற்பட்டு வந்தது.

இதைத் தொடர்ந்து திண்டிவனம் – ஜக்காம் பேட்டை வரையிலான சாலையில் ஹைமாஸ் விளக்குகள் பொறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, திண்டிவனம் டவுன் போலீசார் சார்பில் நகராட்சி கமிஷனருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன் பேரில், திண்டிவனம் நகராட்சி சார்பில், மயிலம் சாலையில் மூன்று இடங்களில் 25 லட்சம் ரூபாய் செலவில் ஹைமாஸ் விளக்குகள் பொறுத்தும் பணி, நகராட்சி கமிஷனர் ஷரீபிர காஷ் மேற்பார்வையில் நடந்தது.

Scanned by CamScanner

தினகரன் சிறுவர் 28.6.2019 • வெள்ளிக்கிழமை 1

திண்டிவனத்தில்

ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றம்

▶ திண்டிவனம் காமாட்சி அம்மன் கோயில் வீதியில், சிறு வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை நகராட்சி ஊழியர்கள் அளவீடு செய்து கடையை ஒதுக்கினர்.

நகராட்சி அதிரடி

திண்டிவனம், ஜூன் 28: திண்டிவனத்தில், மேம்பாலத்தின் கீழ் பகுதியில் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ள கடைகளை அகற்ற நீதி மன்றம் உத்தரவிட்டது. அதன்பேரில் கடந்த சில மாதங்களுக்கு முன் மேம்பாலத்தின் கீழ் பகுதியில் உள்ள அனைத்து ஆக்கிரமிப் புகளும் அகற்றப்பட்டு, நகராட்சி சார்பில் குலுக்கல் முறையில், இப்பகுதியில் கடை வைத்திருந்தவர்களுக்கு மாற்று இடம் வழங்கப் பட்டது.

திண்டிவனம் சந்தை மேடு, வண்டிமேடு, திரவு பதி அம்மன் கோயில் மற் றும் காமாட்சி அம்மன் கோயில் ஆகிய இடங்க ளில் பயனாளிகளுக்கு மாற்று இடம் தேர்வு செய்து கடைகள் ஒதுக் கப்பட்டது.

அப்படி ஒதுக்கப் பட்ட இடம் வியாபாரத் திற்கு தகுந்ததாக இல்லை என சிறு வியாபாரிகள், அப்பகுதியில் சென்று கடை வைக்க மறுத்தனர். ஆனால் காமாட்சி அம் மன் கோயில் தெருவில் 38 கடைகள் பயனாளிக ளுக்கு ஒதுக்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்ட இடத்தில் பூக்கடை வைத்து நடத்தி வந்த னர். இந்த 38 கடைக ளில் ஒதுக்கப்பட்ட கடைக்காரர்கள், மற்ற கடைகளை ஆக்கிரமிப்பு செய்து கடை நடத்துவ தாக புகார்கள் எழுந் தது. இதை தொடர்ந்து நகராட்சி அலுவலர்கள் நேற்று அனைத்து கடைக ளையும் அகற்றிவிட்டு ஒவ் வொரு கடைக்கும் எண் வழங்கினர்.

தொடர்ந்து நகராட்சி மூலம் ஒதுக்கப்பட்டவர் களுக்கு கடை அளந்து வழங்கப்பட்டது. மேலும் ஒதுக்கப்பட்ட சிறு வியா பாரிகள்தான் அந்தந்த இடத்தில் கடைகள் வைத்து வியாபாரம் செய்ய வேண்டும்.

ஒதுக்கப்பட்ட இடத்தை மேல் வாட கைக்கோ, வேறு ஒருவ ருக்கோ வழங்கக்கூடாது. மீறி வழங்கியது தொடர் பாக நகராட்சிக்கு தெரிய வந்தாலோ, புகார்கள் வந்தாலோ கடையின் உரி மம் அகற்றப்படும் என நகராட்சி ஆணையர் ஸ்ரீபிரகாஷ் எச்சரித்தார். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

Scanned by CamScanner

10.7.2019 ● புதன்கிழமை 1

தினகரன்
விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

விழுப்புரம், ஜூலை 10: விழுப்புரம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ஜல் சக்தி அபியான் திட்டத்தின் கீழ் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர்வள பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் விழிப்புணர்வு பேரணி ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கியது. பேரணியை மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சக இணை செயலாளர் சுரேந்தர்சிங் துவக்கிவைத்தார். ஆட்சியர் சுப்ரமணியன் முன்னிலை வகித்தார்.

ஜல் சக்தி அபியான் நீர்வள பாதுகாப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு பணிகளை மேற்கொண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த மக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட உள்ள இயக்கமாகும். பருவகாலம் தொடங்குவதற்கு முன்பு பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

முதல் கட்டமாக ஜூலை 1ம் தேதி முதல் செப்டம்பர் 15ம் தேதி வரையும், அக்டோபர் 1ம் தேதி முதல் நவம்பர் 30ம் தேதி வரையும் செயல்படுத்தப்படும். இந்த இயக்கத்தில் நீர்வள பாதுகாப்பு பணிகள், தனிநபர் இல்லம், வியாபார தளங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு பணிகள், பாரம்பரிய நீர் நிலைகளான ஏரிகள், குளங்கள், குட்டைகள், வரத்து வாய்க்கால்களை தூர்வாருதல் மற்றும் புனரமைத்தல் பணிகள், பயன்பாடற்ற ஆழ்துளை கிணறுகளில் மழை நீரினை சேகரிக்கும் பணிகள், தனிநபர் இல்லங்கள் மற்றும் இதர பகுதிகளில் உபயோகப்படுத்தப்பட்டு வீணாக வெளியேற்றப்படும் நீரினை மறுசுழற்சி செய்தல், விவசாயத்திற்கு நீரினை சிக்கனமாக பயன்படுத்தப்படும் சொட்டு நீர் பாசனம் போன்ற பணிகளை ஊக்குவித்தல். குறைந்த அளவு நீரை உறிஞ்சி வளரும் பயிர்வகைகளை பயிரிட விவசாயிகளை ஊக்குவித்தல் போன்றவை மேற்கொள்ளப்பட உள்ளது.

ஜல் சக்தி அபியான் திட்டம் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இப்பேரணி நடத்தப்பட்டது. மகளிர் திட்ட இயக்குநர் ஈஸ்வரன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை செயற்பொறியாளர்கள் சுந்தரேசன், ராமகிருஷ்ணன், ஆட்சியரின் நேர் முக உதவியாளர் (வளர்ச்சி) மஞ்சுளா, ஊராட்சி உதவி இயக்குநர்கள் ரத்தினமாலா, ஜோதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

▶ விழுப்புரத்தில் நடந்த நீர் மேலாண்மை கருத்தரங்கில் ஆட்சியர் சுப்ரமணியன் பேசினார். அருகில் மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சக இணை செயலாளர் சுரேந்தர்சிங்.

Scanned by CamScanner

(27-07-2015)

தினமலர்
விழுப்புரம்
www.dinamalar.com
www.facebook.com/Dinamalardaily
நமது ஊர் செய்திகளை தரும் நம்பர் 1 நாளித

திண்டிவனத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல்

திண்டிவனம், ஜூலை 27–

திண்டிவனத்தில், நகராட்சி அதிகாரிகள் நடத்திய திடீர் ரெய்டில், ஒரு டன் எடையுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

திண்டிவனம் நகராட்சி பகுதியிலுள்ள கடைகளில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக புகார்கள் வந்தது.

தொடர்ந்து, திண்டிவனம் நகராட்சி கமிஷனர் ஸ்ரீபிரகாஷ் தலைமையில் நகர அமைப்பு ஆய்வாளர் கோகுலகிருஷ்ணன், துப்புரவு அலுவலர் சேகர் உள்ளிட்டோர் நேரு வீதி, மார்க்கெட் பகுதி, விவேகானந்தர் தெரு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கடைகளில் திடீர் ரெய்டு நடத்தினர்.

இதில் விவேகானந்தர் தெருவிலுள்ள ஒரு கடையில், ஒரு டன் மதிப்புள்ள பிளாஸ்டிக் கேரி பேக்குகள் பொருட்கள் கைப்பற்றப்பட்டது. கடை உரிமையாளருக்கு 5000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

Scanned by CamScanner

தினமலர்
www.dinamalar.com
www.facebook.com/Dinamalardaily
விழுப்புரம்
நமது மாவட்ட செய்திகளை தரும் நம்பர் 1 நாளிதழ்
புதுச்சேரி ● வெள்ளி ● ஆகஸ்ட் 23, 2019

ராஜாங்குளத்தின் நிலத்தடி நீர் மட்டம்: மத்திய நீர்வள அதிகாரி ஆய்வு

திண்டிவனம், ஆக. 23–

திண்டிவனம் ராஜாங்குளத்தின் நிலத்தடி நீர் மட்டம் குறித்து, மத்திய அரசின் நீர்வள இயக்கத்தின் இணை இயக்குநர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திண்டிவனம் பகுதிக்கு நிலத்தடி நீருக்கு ஆதாரமாக விளங்கி வந்த, ராஜாங்குளம், சப் கலெக்டர் மெர்சி ரம்யா முயற்சியால், அரிமா சங்கங்கள், தன்னார்வலர்கள் ஒருங்கிணைந்து தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இதன் தொடர்ச்சியாக குளம் ஓரளவிற்கு தூய்மை அடைந்தது. அதன் பிறகு குளத்தை தூய்மைப் படுத்தும் பணி தொடர்ந்து நடைபெறாமல் இருந்ததால், மீண்டும் ராஜாங்குளத்தின் தூய்மை கெட்டு போகும் நிலைமை ஏற்பட்டது.

இந்நிலையில் கடந்த மார்ச் 16ம் தேதி, டில்லியில் உள்ள ஜல்சக்தி அபியான் மழைநீர் சேமிப்பு இணை இயக்குநர் சுரேந்தர் சிங், ராஜாங்குளத்தை பார்வையிட்டு, அதிகாரிகளிடன் ஆலோசனை நடத்தினார்.

குளத்தின் நீர்வரத்து, அதன் பயன்பாடு குறித்து, நகராட்சி கமிஷனர் ஸ்ரீபிரகாஷிடம் விபரம் கேட்டறிந்தார். ஆய்வின் போது, நகராட்சி துப்புரவு அலுவலர் லிப்டன் சேகர், நகர அமைப்பு அலுவலர் கோகுலகிருஷ்ணன், கணக்காளர் அண்ணாமலை உடனிருந்தனர்.

ஆய்விற்கு பிறகு, ஜல் சக்தி அபியான் மழை நீர் சேமிப்பு மற்றும் நீர்வள பாதுகாப்பு இயக்ககத்தின் இணை இயக்குநர், நகராட்சி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார்.

தொடர்ந்து காவேரிப் பாக்கம் நகராட்சி பள்ளியில், மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி நடந்த விழிப் புணர்வு ஊர்வலத்தை துவக்கி வைத்தார்.

■ திண்டிவனம் ராஜாங்குளத்தின் நிலத்தடி நீர் மட்டம் குறித்து, மத்திய அரசின் நீர்வள இயக்ககத்தின் இணை இயக்குநர் சுரேந்தர் சிங் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார். அருகில் நகராட்சி கமிஷனர் ஸ்ரீபிரகாஷ்.

மற்றும் நீர்வள பாதுகாப்பு இயக்ககத்தின் சார்பில், ஜ.ஏ.எஸ்., அதிகாரி அரவிந்த சரண் ராஜாங்குளத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து கடந்த 9ம் தேதியும், இரண்டாவது முறையாக அதிகாரி சரண் குளத்தை பார்வையிட்டு ஆலோசனை நடத்தி விட்டு சென்றார்.

இந்நிலையில் நேற்று பிற்பகல் 1:00 மணியளவில், டில்லியில் உள்ள ஜல்சக்தி அபியான் மழை நீர் சேமிப்பு மற்றும் நீர்வள பாதுகாப்பு இயக்ககத்தின்

Scanned by CamScanner

தினமணி
24.8.2019 • கனிக்கிழமை 1

மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

▶ திண்டிவனம் நகராட்சியில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணியை நீர் மேலாண்மை இயக்குனர் சுரேந்திரசிங் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

திண்டிவனம், ஆக. 24: திண்டிவனம் நகராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. ஜல்சக்தி அபியான் திட்டத்தின் மத்திய அரசின் நீர் மேலாண்மை இயக்குனர் சுரேந்திர சிங் கொடியசைத்து தொடங்கி வைத்தார். நகராட்சி அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட இப்பேரணியில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் விஜயகுமார், நகராட்சி ஆணையர் ஸ்ரீபிரகாஷ், துப்புரவு அலுவலர் லிப்டன் சேகர் மற்றும் நகராட்சி ஊழியர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு மழைநீர் சேகரிப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி ஊர்வலமாக சென்றனர். இதன் தொடர்ச்சியாக திண்டிவனம் மாண்ட்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து மாணவ, மாணவிகளுக்கு விளக்கப்பட்டது. இதில் பள்ளி முதல்வர், ஆசிரியர்கள், நகராட்சி ஊழியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

Scanned by CamScanner